# Chapter - 17 - Speech for 11th March 2023 – 2 - The Divine Soul

சென்ற அத்தியாயத்தில் அதிமனதின் மூன்று நிலைகளை பற்றி பேசினோம்.

முதல் இரண்டு நிலை - பிரம்மம், சிருஷ்டியில் இறங்கும் போது ஏற்படுவது என்றும்,

மூன்றாவது - மீண்டும் பரிணாமத்தில் உயர உதவும் அது பற்றிய ஞானம் கொண்ட நிலை என்றும் பார்த்தோம்.

இந்த மூன்றாம் நிலையை  மனதின் மூலம், உணர முடியாது என்று சொன்னாலும், இறை ஞானமாக பெற வேண்டும் என்று சொன்னாலும் - சில அனுபவங்களை நினைத்துப் பார்த்து அத்தகைய அனுபவங்களை ஆராய்ந்து பார்த்து இந்த இறைவனை நோக்கிய மூன்றாம் நிலையை புரிந்துக் கொள்ள முடியும்.

அன்னை அன்பர் ஆன பிறகு அவர் விருப்பம் என்று செய்தவைகளை நினைத்தால் - அவருக்காக நாம் சில பண்புகளை எடுத்துக் கொண்டு செய்த போது நடந்தவைகளை அதன் மூலம் நாம் பெற்ற திருவுருமாற்றங்களை, சித்த உயர்வை கவனித்தால் TRANSFORMATIVE QUALITIES கவனித்தால், நாம் அது போன்ற மூன்றாம் நிலையை , படைப்பாற்றல் கொண்ட நிலையை தொட்டு இருக்கிறோம் என்பதை புரிந்துக் கொள்ள முடியும்.

உதாரணமாக, சத்தியத்தை, உயர்சித்ததை, முழுமையை உணர்ந்த நிலைகள், முரண்பாடுகளுக்கு இடையே ஒருமையை, ஐக்கியத்தை உணர்ந்த தருணங்கள், வாழ்வில் நடப்பவை அனைத்தும் ஏதோ ஒரு காரணத்திற்காகவே நடக்கிறது என்று உணர்ந்த இடங்கள், நம் மனம், நோக்கம், ஆகியவற்றை தாண்டிய ஏதோ ஒன்று செயல்படுகிறது என்று உணர்ந்த இடங்கள், நம் திறமை, திறன் ஆகியவற்றை முழுதும் வெளிக் கொண்ர்ந்து நம்மை வாழ்வு அடுத்த கட்டத்திற்கு உயர்த்திய இடங்கள், காரணமே தெரியாமல் நாம் ஆனந்தமாய் உணர்ந்த தருணங்கள், இது இறைவன் வந்த தருணம் என்று உணர்ந்த இடங்கள், Miracle என்று சொல்லும் அளவிற்கு பலன் பெற்ற இடங்கள், சிறு முயற்சிக்கு பத்து மடங்கு, நூறு மடங்கு பலன் கிடைத்த இடங்கள், காலத்தை வென்ற இடங்கள், என்னடா வாழ்க்கை என்னும் நிலையில் இருந்து, வாழ்விற்கு ஒரு நோக்கம் வந்து விட்டது என்றோ அதற்காக நாம் நிறைய நாட்கள் வாழ வேண்டும் என்ற ஆர்வமோ வந்த நேரங்கள், சமர்ப்பணம், சரணாகதி, போன்றவை பூர்த்தியானதாக உணர்ந்த இடங்கள், உணர்வு, உடல், மனம் என்று ஒவ்வொன்றும் ஒரு பக்கம் இழுக்காமல் நம் ஞானமும், உறுதியும், நோக்கமும் ஒரே கோட்டில் உயர் சித்தத்திற்காக திடமாக

நின்ற தருணங்கள், என்று அனைத்தையும் பொறுமையாக கவனத்திற்கு கொண்டு வந்து அன்று, அந்த கணத்தில், நாம் நம் மனம் இருந்த நிலையை ஆராய்ந்தால், அகந்தையில் இருந்து க்ஷண நேரம் வெளி வந்து இறைவனை அல்லது இறைவனின் பார்வையை, வாழ்வை, உலகை பார்த்திருப்பது தெரியும். குறைந்த பட்சம் தோற்ற போதே வென்றாய் என்னும் அளவிற்கு நம் இயலாமையின் முழுமை புரிந்த தருணங்களாக அவை இருந்திருக்கும். அத்தகைய மனநிலையை சித்த பூர்வமாக கொண்டு வரமுடிந்தால் - conscious ஆக கொண்டு வர முடிந்தால், நம்மால் ஓரளவு இந்த மூன்றாம் நிலையை புரிந்துக் கொள்ள முடியும். இந்த மாதிரி இடங்களில் ஒன்று - இறைவனுடனான நம் ஐக்கியத்தை உணர்ந்திருப்போம். அல்லது இறைவனின் நீட்சி தான் நம்மை சுற்றியுள்ள, அனைத்தும் மனிதர்கள், செயல்கள் அனைத்தும் என்னும் விளக்கம் புரிந்திருக்கும். மூன்றாவதாக அது தான் நம் பரிணாமத்திற்கு உதவுகிறது என்றும் புரிந்து இருக்கும்.

இந்த மூன்று நிலைகளை நாம் அதிமனதின் மூன்று பரிமாணங்களாக புரிந்துக் கொள்ளலாம். அதன் மூலம் நாம் பெற்ற ஞானம் என்னவாக இருக்கும் என்றால் நாம் இறைவனின் படைப்பு, அல்லது அவனே நாமாக இருக்கிறோம், மீண்டும் அவனை அடைய வேண்டும் அல்லது அவனாக மாற வேண்டும் என்னும் தேடல், நான் யார் என்னும் கேள்வியில் இருந்து ஆரம்பிக்கும் . நம் படைப்பின் நோக்கமே பரிணாமத்தில் உயர்வது தான் என்பது புரியும். நடக்கும் அனைத்தையும் அந்த பார்வையில் பார்த்து - படைத்தவர், படைப்பு, அதை அனுபவிப்பவர் அனைத்தும் ஒன்றே என்னும் ஞானம் பெரும் நிலைக்கு வருவோம். நம்முள் இருக்கும், நாம் வெளிப்படுத்தும் கொள்கை, பண்பு, நோக்கம் ஆகியவற்றுக்கான ஆர்வம் கூடும்.. இந்நிலைகள் நாம் நம்முள் உள்ள ஆன்மாவை உணர்ந்ததற்கான அடையாளங்கள். அல்லது உள்ளே இருக்கும் ஆன்மா வெளிவர தொடங்கிவிட்டதற்கான அடையாளங்கள். அதை உள்ளே இருந்து தரும் ஒன்றைத் தான் நாம்  இறை ஆன்மா என்று புரிந்துக் கொள்ள போகிறோம்.

இவற்றை எல்லாம் சென்ற அத்தியாயத்தின் சாரத்தில் பொருத்திப்பார்க்கும் போது, அல்லது நம் அனுபவத்தில் பொருத்தி பார்க்கும் போது அன்னை மேல் நம்பிக்கை, அவரே நம் ஆன்மா என்று சில நமக்குத் தெரிந்த ஆன்மாவின் பண்புகளை பின்பற்றுகிறோம். இங்கொன்றும் அங்கொன்றுமாக நமக்கு தோன்றும் நேரங்களில், தேவையான நேரங்களில் பின்பற்றுகிறோம். ஆனால் பல நேரங்களில் நம்மால் தொடர்ந்து அந்த பாதையில் பயணிக்க முடிவதில்லை. ஒவ்வொரு கட்டம் முன்னேறுவது போல தோன்றினாலும் பல நேரங்களில் ஒரே இடத்தில், ஒரே தளத்தில் நிற்பது போலவே இருக்கிறது .  ஆனால் அது போன்ற நேரங்களில் Life divine பற்றி நினைக்கும் போது, படிக்கும் போது சித்தம் உயர்வது

போல இருக்கிறது. நாம் ஏன் இப்படி இருக்கிறோம் என்பதை ஒரு புது கண்ணோட்டத்தில் பார்க்கத் தோன்றுகிறது.

உதாரணமாக, அதிமனதின் மூன்று நிலைகளை பார்த்தோம். அவற்றையெல்லாம் தத்துவ ரீதியாகவும், ஓரளவு நடைமுறையில் புரிந்துக் கொள்ள சில ஒப்பீடுகளையும் செய்து பார்த்தோம். அதாவது நம் மேல் மனதில் அதன் அனுபவங்களைக் கொண்டு அதிமனதை புரிந்துக் கொள்ள நினைத்தோம். அப்போது அடிப்படை புரிதலாக நமக்கு கிடைத்தது என்னவென்றால் தத்துவமெல்லாம் கிடக்கட்டும் நாம் எங்கிருந்து வந்தோமோ அங்கேயே சென்று விட்டால் தான் நம்மால் ஆனந்தமாக இருக்க முடியும் என்னும் புரிதலுக்கு வருகிறோம். அப்படித்தோன்றும் நேரங்களில் தான் நாம் சித்தத்தில் அடுத்த கட்டத்திற்குச் செல்கிறோம். அந்த புரிதலை வாழ்வில் வெளிப்படுத்தும் போது தான் நமக்கு ஆனந்தம் அல்லது ஒரு அடையாளமான நிம்மதி அமைதி நமக்கு கிடைக்கிறது.  தத்துவமாக புரியும் நம் இறைத்தன்மை நடைமுறையில் அதை முற்றிலும் இழந்து அல்லது பிரிந்து மனிதன் என்ற பெயரில் ஒரு விலங்காக இருப்பது புரிகிறது. இந்த நிலையில் இருந்து நமக்கு தெரிந்த, புரிந்த அளவிலான உயர்சித்தத்திற்கு இறைத்தன்மைக்கு மீண்டும் நாம் செல்ல வேண்டும், அதற்கு தேவையான பண்புகள் நமக்கு எட்ட வேண்டும். அதை நாம் எப்படி எட்ட முடியும். அதற்கு என்னவென்ன மாற்றங்களை நாம் கொண்டு வரமுடியும், அதற்கான வழிகள் என்னென்ன இருக்கின்றன என்னும் கேள்விகள் நம்முள் எழ வேண்டும்.

இதில் கர்மயோகி முதல் வழியாக சொல்வது நம் குறைகள் அனைத்தையும் நமக்கு குறை என்று உணர்ந்த அனைத்தையும் களைய முன் வரவேண்டும். நம் கற்பனையில் அல்லது புரிதலில் என்ன தான் இறைவனை வரையறையற்றவன் என்று நினைத்தாலும் உண்மையில் உணர்வில் ஒரு குறுகிய, எல்லைக்குட்பட்ட வரையறைக்குட்பட்ட, ஒருவராகத்தான் நாம் இறைவனை உணர்கிறோம். அதாவது சர்வ வல்லமை பொருந்திய தெய்வம் என்று நினைப்பதற்கு - நம்மைப் பொறுத்தவரை அன்னைக்கு - எல்லைகளை வகுக்கிறோம்.

உதாரணமாக நம் பிராத்தனைகளை பார்த்தால் இது புரியும். நமக்குத் தெரியாத வழி அன்னைக்கும் தெரியாது என்று ஒரு அடிப்படை நினைப்பு இருப்பதை கவனித்துப் பார்த்தால் தெரியும். பிரார்த்தனையை  எப்படி நிறைவேற்ற வேண்டும், அதற்கான வழிகள் என்ன என்று மனதில் ஓடுவது தெரியும். என் பையனுக்கு நல்ல வாழ்க்கை, ஆனந்தமயமான வாழ்க்கை வேண்டும் என்று சுருக்கமாக பிரார்த்தனை செய்ய மாட்டோம். இந்த college இல் இந்த seat வேண்டும் என்று ஆரம்பித்து, இந்த கம்பெனியில் இந்த சம்பளத்தில் வேலை வேண்டும் என்று ஆரம்பித்து , இந்த உயரத்தில், இந்த அந்தஸ்தில், இந்த நிறத்தில் வேண்டும் என்ற

அனைத்து விளக்கங்களோடு தான் நம் பிரார்த்தனை இருக்கும். அதாவது நாம் தெய்வம் என்றும், அனைத்தையும் நடத்துபவர் , அனைத்து ஞானமும் கொண்டவர், முக்காலமும் அதற்கு மேலும் உணர்ந்தவர் என்று நினைக்கும் அன்னைக்கே எல்லைகளை வகுக்கிறோம் என்பது நாம் செய்யும் முதல் தவறு.

நாமே எல்லைக்குட்பட்டவர்கள் கிடையாது என்னும் போது நாம் எப்படி இறைவனுக்கு எல்லைகளை வகுக்க முடியும். நாமே இறைவன் அல்லது இறைவன் தான் நாமாக இருக்கிறோம் என்னும் போது, தத்துவமாகவாவது அதை ஏற்றுக் கொள்ளும் போது, அதை ஒட்டி நம் மனம் செல்லாமல் அவற்றுக்கு வரையறை விதிப்பது, எல்லைக்குட்படுத்துவது நம் அறியாமை தான் என்பது புரிவது நம் அகந்தை புரிவது. அதை புரிய வைக்க தெய்வத்தைப் பற்றிய நினைவு இருக்கும் ஒன்றால் தான் முடியும். இறைவன் ஒருவனே, எங்கள் இறைவன் தான் உயர்ந்தவன் என்று சில மதத்தினர் பேசுவது போல, அன்னை நமக்கு மட்டுமே என்று நினைக்கிறோம். அன்னை அன்பர் என்றால், குறிப்பாக அன்னை சேவையில் இருந்தால் ஏதோ கொம்பு முளைத்தது போல இருக்கிறோம். தனி இனமாக, மதமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை கூட எழுந்தது. அன்னை அனைவருக்குமானவர் என்றளவிற்கு கூட நம்மால் இறைவன் விரும்பும் ஐக்கியத்தை, ஒருமையை கொண்டு வரமுடியவில்லை.

தத்துவங்கள், கொள்கைகள் புரிந்த இரண்டு அன்பர்கள் தங்களிடையே கூட ஒருமையை காண முடியவில்லை, பண்புகளை கடைபிடிக்க முடியவில்லை என்னும் போது, எங்கோ இருப்பதாக நினைக்கும் இறைவனுடன் எப்படிப்பட்ட ஒருமையை நாம் பார்க்க முடியும்.

உதாரணமாக நான் படைக்கும் அனைத்திலும் நான் இருக்கிறேன், என் கட்டுரைகள், சொற்பொழிவு, company ஆரம்பித்தது, சுய தொழில் செய்வது என்று எதை எடுத்துக் கொண்டாலும் அதில் நான் இருக்கிறேன். என் idea இருக்கிறது. என் எண்ணம், நோக்கம், அது வெளிப்படும் முறைகள் என்று எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகவே அத்தனையும் இருக்கிறது. இந்த உள்ளடக்கம் அல்லது வெளிப்பாடு ஆகியவற்றின் அடிப்படை நோக்கம் என்னவென்றால், ஒரு ஆனந்தம் , அதற்கான தேடல், அதை ஒட்டிய ஒரு idea - அதனால் நான் படைப்பவற்றின் இயல்பே ஆனந்தம் தான், அதன் நோக்கம் ஆனந்தம் தான், என் செயல் அனைத்தும் அந்த ஆனந்தத்தை வெளிப்படுத்த தான் என்றாகிறது. இதை அப்படியே இறைவனிடம் கொண்டு வருவோம். அவன் படைத்ததில் அவன் இருக்கிறான். அவன் நோக்கம், அவன் திட்டம், அவன் எண்ணம் அது வெளிப்பட வேண்டிய முறைகளை அனைத்தையும் உள்ளடக்கியதாக அவன் படைப்பு இருக்கிறது. அதாவது அதன் இயல்பு ஆனந்தமாக தான் இருக்க வேண்டும். அது

வெளிப்படுவதற்குத் தான் அது படைக்கப்படுகிறது. அது வெளிப்படுத்துவது அனைத்தும் சத் , சித், ஆனந்தம் தான் என்பதே நம் புரிதலாக இருக்க வேண்டும். பரமாத்மாவில் இருந்து ஜீவாத்மா வருகிறது. ஜீவாத்மா, தனித்துவம் பெற்று தனி மனித வாழ்வு நிலைக்குள் வருகிறது. மனிதன் அறியாமையை விட்டு, தன் இறைத்தன்மையை உணர்ந்து, அதை தன் வாழ்வில் வெளிப்படுத்தி தானே இறைவனாவது என்பது இறைவனின் நோக்கம். இப்படி நாம் வெளிப்படுத்த ஆரம்பிக்கும் போதே நாம் தெய்வங்கள் என்னும் நிலைக்கு உயர்வதாக கூறுகிறார் பகவான். அதை முழுதும் உணரும் போது அதாவது பிரம்மத்தை உணரும் போது அவர்களையும் தாண்டி ரிஷி, பிரம்ம ரிஷி போன்ற நிலைகளை அடைகிறோம் என்கிறார். பகவான் Richness என்று சொல்லும் இடங்களை கர்மயோகி தெய்வீக வாழ்வு வாழும் நிலை என்கிறார். அப்படிப்பட்ட வாழ்வை வாழ்வதற்கு முன் நாம் அதற்கு காரணமான இறை ஆன்மா பற்றித் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

அதற்கு விளக்கமாக கர்மயோகி நாம் அன்னை வாழ்வில் வெளிப்படும் இடங்களை கவனித்தால் அதை உணர முடியும் என்கிறார். உதாரணமாக surrender ரோஜாவை தினமும் கடையில் வாங்கலாம். அன்னைக்கு வைக்கலாம். ஆனால் ஏதோ ஒரு பூ நம் தோட்டத்தில் பூத்தால் , அதனால் வரும் ஆனந்தம் , அதை அன்னையிடம் வைக்கும் போது வரும் திருப்தி, இரண்டுக்கும் இருக்கும் வித்தியாசத்தை பார்த்தால் , இது ஓரளவு புரியும். அது நம் படைப்பு என்பதால் வந்ததா, அல்லது அது அன்னையை நோக்கியதால் வந்ததா என்ற வித்தியாசத்தை உணர்ந்தால் இறை ஆன்மாவும் அது ஆனந்தம் தரும் விதமும் புரியும்.

தினமும் bank இல் கோடிக்கணக்கான பணம், நோட்டுக்களை எண்ணுபவர். அவர் தான் சம்பளமாக பெற்ற கட்டை எண்ணும் போது, எந்த மனநிலையில் இருப்பார். தினமும் பிறருக்கு பிறக்கும் குழந்தையை தூக்கும் nurse - தனக்கு பிறந்த குழந்தையை தூக்கும் போது எப்படி உணர்வார், அப்படிப்பட்ட உணர்வுகளை வித்தியாசப் படுத்தி பார்த்து நம்மால் உணர முடிந்தால், அப்படி வாழ்வில் அன்னை வெளிப்பட்ட இடங்களை உணர்ந்தால், இறை ஆன்மா இருப்பதும், அதன் செயல்களும், வெளிப்பாடுகளும் நமக்குப் புரியும்.

இது வரை, சிருஷ்டி என்ற பார்வையில் - இறைவன் படைப்பில் ஈடுபடும் பார்வையில் பார்த்தோம். நம்முடைய limited nature க்கு, வரையறை ஏற்படுத்தும் தன்மைக்கு வந்ததை பார்த்தோம். அதில் புரிய வேண்டியது என்னவென்றால் நாம் மீண்டும் அதில் ஏற வேண்டும் என்பதே. அதற்கு உதவி செய்யும் இடம் நிலை அல்லது தளம் எது என்று பார்ப்பதே ஞானம். அந்த ஞானம் அறிவு, ஆற்றல், சக்தி ஆகியவற்றை உள்ளடக்கியது. வாழ்வில், சித்தத்தில் முன்னேற்றி ஆனந்தத்தை

தரக் கூடியது. இந்த இடங்கள் தான் நாம் இறை ஆன்மாவை கண்டுக்கொள்ளும் இடங்கள். ஒரு சாதாரண உதாரணத்தில் கூட இதை பார்க்க முடியும். நம் நிலை அறிந்து, இயலாமை அறிந்து, அறியாமை அறிந்து, அன்னையிடம் பிரார்த்தனை செய்யும் போது அது நடக்கிறது, ஆனந்தமடைகிறோம். அது நாம் ஆன்மாவை நோக்கியதற்கும், அது வாழ்வில் வெளிப்பட்டதற்கும் ஒரு பெரிய உதாரணம். ஆனால் நாம் பலனிலேயே, அதை கவனிப்பதிலேயே நின்று விடுகிறோம். அதை அனுபவிப்பதிலேயே நின்று விடுகிறோம். அதன் process ஐ கவனிப்பதில்லை. நாம் நம் அகந்தையை விட்டு வந்து ஆன்மாவை அழைத்ததை, அதனால் அதன் ஒரு பண்பு வாழ்வில் வெளிப்பட்டதை, அதனால் பலன் கிடைத்து நாம் ஆனந்தம் அனுபவிப்பதை நாம் கவனிப்பதில்லை.

உதாரணமாக பிரார்த்தனையின் போது, அன்னை அறையில் அல்லது மையத்தில் வந்து அமர்கிறோம். அந்த கணம் சற்று நேரம் நம் நோக்கம், திட்டம், எதிர்பார்ப்பு அனைத்தையும் விட்டு அமைதி ஆகிறோம். அந்த நேரத்தில் நமக்கு ஒரு வழி பொறியாகத் தோன்றுகிறது அல்லது நம்மையறியாமலேயே அந்த பொறி வாழ்வில் செயல்பட்டு காரியம் நடக்கிறது, பலன் கிடைக்கிறது, அதாவது நாம் நம் அகந்தையின் அதன் வடிவங்களில், அதன் செயல்பாடுகளில் இருந்து வெளியே வந்து அன்னையை, இறை ஆன்மாவை நோக்கும் போது, அந்த கணத்தில் ஏற்படும் அமைதி ஆன்மாவின் பண்பு. அது செயல்பட்டு அனைத்தையும் நடத்திக் கொடுக்கிறது. இப்படி வாழ்வில் ஆன்மாவின் பண்புகள் நம் வாழ்வில் செயல்பட்டு நமக்கு முன்னேற்றத்தை தந்த, ஆனந்தத்தை தந்த இடங்களை கவனித்தால். நாம் அதிக பட்ச பலன் பெற்ற இடம் நாம் அதிகபட்ச அன்னையுடன் ஒன்றிய இடங்களாகவே இருக்கும். அந்த ஒருமையை அனுபவித்து ஆனந்தப்படுவது நம் வேலை. இறை ஆன்மாவின் முதல் வேலை இது. this is the status of divine soul என்கிறார். அதை நாம் புரிந்துக் கொள்ளும் முதல் படி இது. அப்படி புரிந்துவிட்டால், அதை நோக்கியே நம் பார்வை இருந்தால், அதாவது இறைவன் அந்த பிரிதிநிதி அல்லது அன்னை மேல் மட்டுமே நம் பார்வை, சித்தம் இருந்தால், விழிப்புணர்வு இருந்தால், வாழ்வு எப்படி ஆனந்தமயமான வாழ்வாக இல்லாமல் இருக்கும் என்று கேட்கிறார். அதன் ஒரு வரி தான் கர்மயோகி அறையில் அவருக்கு எதிரில் - there is no joy - other than consecrated living என்று எழுதப்பட்டு இருக்கும். சமர்ப்பணம் செய்த வாழ்க்கையை விட ஆனந்தமானது வேறு எதுவும் கிடையாது என்பது அதற்குப் பொருள். அதன் ஒரு சிறு வடிவம் தான் பிறர் நிலை பார்வை, other man point of view என்பதால் தான் மற்ற எந்த நேரத்தையும் விட இந்த பண்பு அதிகபட்ச பலனைக் கொடுக்கிறது. நான் சென்ற கூடல்களில் சொன்ன லஞ்சம் தருவதன் உதாரணங்கள் இதற்கும் பொருத்தும். அதன் அடிப்படை என்னவென்றால் other man point of view , corespondence போன்றவை.இறைவன்

தேடும் ஒருமையின் ,ஐக்கியத்தின் வெவ்வேறு வடிவங்கள். அதனால் தான் அவை அந்த அளவிற்கு பலிக்கின்றன. இந்த அடைப்படை புரிந்தால், இறைவனுடனான ஒருமைக்கு என்ன செய்ய வேண்டும், எப்படி செய்ய வேண்டும் என்று சிந்தித்தால் - to beomce that - அதுவாக, அன்னையாகவே மாறும் வரை செல்லலாம் என்கிறார்.

இறை ஆன்மா சத்தியத்தின் அம்சம். உயர் சித்தம், உயர் பண்புகள் அனைத்துடனும் ஒன்றி இருக்கும். குறைந்த பட்சம் நாம் பொய்மையில் இருந்து, அதன் வடிவங்கள், அம்சங்களில் இருந்து விலகி நிற்க முயன்றால், நம் பார்வையை, சத்தியத்தை நோக்கித் திருப்புவதாக அமையும்.

அன்னை அன்னை என்று சொல்லிவிட்டு, அன்னைக்கு எதிரான வழிகளை பின்பற்றினால், நாம் சத்தியத்தை, அதை நோக்கி இருக்கும் இறை ஆன்மாவை, அது நம் வாழ்வை நடத்துவதை நாம் விரும்பவில்லை என்று பொருளாகிறது. அது தரும் முழுமையான, நிரந்தரமான ஆனந்தமான வாழ்வை நாம் விரும்பவில்லை என்றாகிறது. பொய்மையின் அம்சங்களை ஒட்டியே வாழ்ந்து, அது தரும் தற்காலிக சுகங்களையே விரும்புகிறோம் என்று பொருளாகிறது

நம் அகந்தையின் விருப்பங்கள் காலத்திற்கு உட்பட்டது.. இறைவன் காலத்தை கடந்தவன். இந்த இரண்டும் சேரும் இடத்தில் இறை ஆன்மா இருக்கிறது என்னும் போது இறைவன் வெளிப்படும் படி அவன் real idea , மூலம் வெளிப்படும்படி நாம் செய்யும் எதுவும் காலத்துள் காலத்தை கடந்த நிலையாக இருக்கும். அப்படி நடப்பது எல்லாம் miracles என்று சொல்லும் படி இருக்கும். அல்லது miracle என்று நாம் நினைப்பவற்றை இந்த கண்ணோட்டத்தில் ஆராய்ந்தால் இறைவன் விரும்பிய ஒன்று அங்கு வெளிப்பட்டு இருக்கும். குறிப்பாக கடந்த கால சமர்ப்பணம், மனமாற்றம் போன்றவற்றை செய்யும் போது கிடைத்த பலனை, அடைந்த மாற்றங்களை ஆராய்ந்தால் இது புரியும். நடைமுறையில் எளிமையாக இதை நம்மையும் அன்னையையும் இணைக்கும் ஒரு நிலை என்று எடுத்துக் கொள்ளலாம். இதை இந்த அத்தியாயத்தை ஒட்டி பார்க்கும் போது மாயை அகந்தையாக முழுமையை பிரிப்பதாக, அதனால் அஞ்ஞானம் உண்டாவதாக உணர்கிறோம். ஆனால் உண்மையில் அது அம்சங்களைத்தான் பிரிக்கிறது. ஒவ்வொரு பிரிவினையிலும் அடுத்தக்கட்டத்திற்கான வித்து இருக்கிறது என்பதை நாம் கவனிப்பதில்லை. உதாரணமாக நமக்கு ஆனந்தம் முழுமை அதன் வெளிப்பாடு prosperity என்றால், நாம் சுத்தம் cleanliness என்பதில் இருந்து ஆரம்பிக்கிறோம். அது ஒரு பகுதி - ஒரு பிரிவினையாக பார்ப்பது. என்னிடம் பலரும் கேட்பார்கள், நான் சுத்தத்தை அந்த அளவிற்கு கடைபிடிக்கிறேன் ஆனால் பணம் வருவதில் தடையே ஏற்படுகிறது என்று. ஆனால் சுத்தத்தின் வித்தாக

இருப்பது அதற்கு அடுத்த நிலையான ஒழுங்கு, organization - everything has a place and everything in its place என்பது அன்னை சொல்லும் நிலை.

அடுத்து, தேவையானதை தேவையானத்திற்கு மட்டுமே பயன்படுத்துவது. உதாரணமாக பால்கவரை கிழிக்கும் கத்திரியை paper கத்திரிக்க உபயோகப் படுத்தக் கூடாது, paper கத்திரியை மீசை வெட்ட உபயோகப் படுத்தக் கூடாது என்பது போன்ற தேவையில்லாத உபயோகமில்லாத, attention தர முடியாத எந்த பொருளும் இல்லாமல் இருப்பது என்று அடுத்த கட்டத்திற்கான வித்து முதல் பிரிவினையில் இருக்கிறது. அதாவது அது அம்சத்தின் பிரிவினை. அது அடுத்த அடுத்த நிலையில் நமக்குத் தேவையான திறன், திறமை, ஆகியவற்றை சுட்டிக் காட்டுவது அதற்கான personality யை வளர்த்துக் கொள்வது என்று வளர்ந்து prosperity , ஆனந்தம் என்று முழுமை பெறுகிறது. அதாவது தாழ்ந்ததில் உள்ள வித்து உயரும் போது அது ஆனந்தத்தை தருகிறது. நம்மில் சிருஷ்டியில் வந்த இறைவன், பரிணாமத்தில் உயரும் போது அவன் விரும்பிய ஆனந்தம் கிடைக்கிறது. ஒரு விஷயத்தை ஜடமாக செய்கிறோம். பழக்கத்தில் செய்கிறோம். அது ஒரு பலனைத் தருகிறது. அதையே ஆர்வத்தால் செய்கிறோம் - அதிக திறமை கொண்டு செய்கிறோம். செம்மைக்காக செய்கிறோம். உயர் நோக்கங்கள், பரந்த மனப்பான்மைக்காக செய்கிறோம் என்னும் போது செயலுக்கான காலமோ, அல்லது பலனுக்கான காலமோ பல மடங்கு சுருக்கி வருவதை காண முடியும். அல்லது நாம் எதிர் பாரத்தை விட அதிக பலன் வருவதை காண முடியும்.

அதாவது தேவையான காலத்தை கடக்கிறோம். காலத்துள் காலத்தை கடந்த நிலையில் பலன் பெறுகிறோம். இரண்டையும் இணைப்பது நம் பரிணாமத்திற்கான நம் ஆர்வம். அதைத் தருவது இறை ஆன்மா. காரணம் அது இறைவன் விரும்புவது. இன்னொன்று இந்த நிலையில் நாம் நோக்கம். தெய்வம், அகந்தை, ஆன்மா என்று அனைத்திலும் ஒரே நேரத்தில் இருக்கிறோம். அதாவது இறை ஆன்மா எல்லா வித பிரிவினையையும் விலக்குகிறது அல்லது நாம் பார்க்கும் பிரிவினை அனைத்தும் ஒரு ஒருமையின் பகுதியே என்பதைக் காட்டுகிறது.

மரபு அகந்தையின் செயல்கலிருந்து விலகு என்று சொல்லி வாழ்வை விலக்குகிறது . நிஷ்டை, தியானம் போன்ற சமாதி நிலைகளில் இறைவனை அடைய முடியும் என்று கூறுகிறது. அதன் மூலம் ஆனந்தம் அடைய முடியும் என்று கூறுகிறது. அதே போல வாழ்வில் கட்டுப்பட்டு இருப்பது அகந்தை நிலை. ஆன்மீக உயர்வுகள் அதற்கு இல்லை என்று ஆகிறது. இரண்டும் பகுதியான பிரிவினை நிலை. இந்த இரண்டும் இல்லாமல் வாழ்வின் மையத்தை ஆன்மாவின் மையமாக

மாற்றுவது பரிணாமம். அதைச் செய்ய தூண்டும் இடத்தில் இருப்பது இறை ஆன்மா.

நம் சுபாவம், நம் அம்சம் என்று நம்மை பலவாக நம்மை பிரிக்க முடியும். சூழ்நிலைக்கு ஏற்ப, மனநிலைக்கு ஏற்ப, மூடுக்கு ஏற்ப நடக்க முடியும். ஆனால் அப்படி நம் அங்கங்களை பிரித்து பார்க்க முடியுமா. அது முழுமை. எதற்காக படைக்கப்பட்டதோ அதற்கான வேலையை மட்டுமே அது செய்ய முடியும். அது போல இறை ஆன்மா என்பதன் சட்டங்கள்

1. அது எப்போதும் முழுமையை பார்க்கும். அதனால் அது அறியாமையில் இருந்து வெளியே வர, ஞானத்தைப் பெற தேவையான சித்தத்தைக் கொண்டு இருக்கும்.

2. எப்போதும் இறைவனின் நோக்கத்தை சிந்தித்த படி இருக்கும்.

3. காலம், காலத்தை கடந்த நிலை இரண்டையும் இணைக்கும் அம்சங்களை பற்றிய சிந்தனை, ஞானம் ஆகியவற்றை வெளிப்படுத்த எப்போதும் தயாராக இருக்கும்.

4. இறைவனுக்கும் மனிதனுக்கும் பாலமாக செயல்பட தயாராக இருக்கும்.

5. பரமாத்மா, ஜீவாத்மா, தனித்துவம் ஆகியவற்றை பற்றிய ஒருமையை பற்றிய தெளிவு எப்போதும் அதனிடம் இருக்கும்.

இந்த அனைத்தையும் நன்றாக புரிந்துக் கொள்ள வேண்டும் என்றால் கடந்த கால சமர்ப்பணம் செய்து ஒரு விஷயம் நடந்து இருந்தால், அதை இன்று இந்த கண்ணோட்டத்தில் ஆராய்ந்தால், இதை புரிந்துக் கொள்ள முடியும். செய்த செயல் திரும்ப வராது, மாற்ற முடியாது என்பது பொதுவான கருத்து. அதாவது காலம் சென்ற நிலை அல்லது காலம் கடந்து விட்டது என்னும் நிலை. ஆனால் கடந்த கால சமர்ப்பணம் செய்து உயர் ஞானம், முழுமை , புரிந்து, உயர்சித்தம், மனமாற்றம் போன்ற பரிணாமத்திற்கான வடிவங்களை கொண்டு வரும் போது அவை மாறுகிறது. அதாவது காலத்தை reverse செய்ய முடிகிறது அல்லது காலத்துள் காலத்தை கடந்த நிலையை கொண்டு வர முடிகிறது என்பது நம்மில் இறை ஆன்மா இருக்கிறது அதை செயல் பட விட்டால், பல விஷயங்களை அதுவே சாதிக்கும் என்பதை புரிந்துக் கொள்ள முடியும். ஆனால் நாம் தான் இறைவன், அல்லது நம்முள் இறைவன் இருக்கிறான், அல்லது அவனது பிரதிநிதியாக இறையான்மா இருக்கிறது என்ற நினைவு இல்லாமல் இறைவன் ஒரு முனை, நாம் ஒரு முனை என்று நினைக்கிறோம். அதற்கான காரணமாக, தடையான ஐந்து

நிலைகளை தருகிறார்., நம் அறியாமை, பகுதியை மட்டுமே பார்ப்பது, மேல் மனதில் மட்டுமே வாழ்வது, காலம் அதாவது வரையறைகளை மட்டுமே பார்த்து முடிவு செய்வது, இவை தான் என் வேலை என்று நினைக்கும் அகந்தை யை பற்றிய சித்தம் இல்லாமல் இருப்பது. - என்னும் இந்த ஐந்து தடைகளை களைந்தாலே நாம் இறையான்மாவைத் தொட முடியும். வாழ்வில் வெளிப்படுத்த முடியும்.

இதற்கான உதாரணங்கள் விளக்கங்கள் பெரிதாகும் என்பதால் அவரவர் சிந்தனைக்கே விடுகிறேன். அவரவர் வாழ்வில் பொருத்தி பார்த்து சிந்திப்பது அதிக புரிதலை கொடுக்கும். அதற்கான முறையாக அந்த தடைகளில் இருந்து வெளியே வரும் முறையாக process நான் புரிந்துக் கொண்டவற்றை மட்டும் தருகிறேன்.

நம் ஞானம் என்பது நம் அறியாமையில் இருந்தே வருகிறது. அதாவது நாம் ஞானம் என்று நினைப்பது நம் அனுபவங்களின் சாரம். அதனால் ஏற்பட்ட அபிப்ராயம். அதை ஒட்டிய விவேகம், விருப்பு வெறுப்புகள், எதிர்பார்ப்புகள், இவையெல்லாவற்றுக்கும் அடிப்படை மனமே என்பதால் அது முழுமை இல்லை. அதனால் முழுமையான நிரந்தரமான ஆனந்தத்தை பெற முடிவதில்லை. நம் ஞானத்தை அதை ஒட்டிய நம் மனப்பான்மை, நோக்கம், தேர்வுகளை, choice களை அன்னையின் பார்வையில் பார்க்கும் போது அதன் முழுமை புரியும். ஆன்மா செயல்பட வழி வகுக்கும். அந்த ஞானத்திலும் அகந்தை தன்னை வலியுறுத்தும். அதிலும் கவனமாக, விழிப்பாக இருக்க வேண்டியது நம் கடமை.

உதாரணமாக நம் பிரார்த்தனைகளை சமர்ப்பணம் என்று சொல்வது, நம் தேவைகளை மட்டுமே மனதில் வைத்து பிரார்த்தனை செய்து விட்டு Thy will என்று சொல்வது சமர்பணத்தை அகந்தை எடுத்துக் செய்வது. அது முழுமையான ஆனந்தத்தை தராது. நாம் விரும்புவதையும் தராது. அன்னை விரும்புவதையும் தராது. அது புரிந்தால் நாம் மனம் மூலம் அதன் ஆயுதமான பிரிவினையை , சத்தியத்தை உபயோகித்து வாழ்வை கட்டுப்படுத்தும் முறைக்கு கொண்டு வருவது எப்படி என்பது பிடி படும்..

அது போல காலத்தை கடக்க முடியும் என்பதன் முழுமையை நாம் பார்ப்பதில்லை. நான் கூறும் என் படிப்பு உதாரணங்கள், வியாபார உதாரணங்கள் பல இதைச் சுட்டிக்காட்டும். காலம் என்பது சுபாவத்திற்கு கட்டுப்பட்டது. சுபாவம் மாறினால் காலம் மாறும். இழந்தவை வரும் என்பதை அது காட்டும் .

இங்கு கர்மயோகி தரும் ஒரு வித்தியாசமான உதாரணம் எனக்கு பிடித்து இருந்ததால் அதை தருகிறேன். பிறப்பு, இறப்பு என்பதை இரண்டு

எதிர்முனைகளான அதற்கு reversal என்பதே கிடையாது என்று நினைக்கிறோம். காரணம் அதன் பகுதியான உடலை நாம் அதற்கு அடையாளமாக எடுத்துக் கொள்வதால். அப்படி இல்லாமல் பகவான் போன்றவரை எடுத்துக் கொண்டால், பிறப்பு, இறப்பு இரண்டும் அவருக்கு உண்மை என்றாலும் அதையும் தாண்டி இறந்தும் வாழ்கிறார். அவர் உடலை சூட்சுமத்தில் இன்றும் பார்ப்பவர் உண்டு, உணர்ச்சிகளில் நிஜ உருவமாக உணர்பவர்கள் உண்டு என்பது - வாழ்வின் மிக முக்கியமான சட்டத்தைக் கூட உயர் சித்தங்களை, உயர் மனநிலைகளை, அதிமனநிலைகளை அடையும் போது உடைக்க முடியும், மீற முடியும் என்பதை காட்டுகிறது. இறந்த பின்பும் வாழ்வதை புனர்ஜன்மம் என்று கூறுவார். இதன் பொருள் பிறப்பையும், இறப்பையும் கடந்தவர் அல்லது ஒன்றிணைத்தவர் என்று பொருள் இறப்பு வரை சென்ற பலர், தன்னம்பிக்கை மூலம், முயற்சி மூலம் மீண்டதை கேள்விப்பட்டு இருக்கிறோம். இது எதை காட்டுகிறது என்றால், உயர் மனநிலைகளை, உயர் சித்தத்தை எட்டுவதன் மூலம் நாம் முரண்பாடு, தவிர்க்க முடியாதது என்று நினைப்பவற்றை கூட மாற்ற முடியும் என்பதே . அதை உருவாக்கும் மையம் இறை ஆன்மா.

தொழிலில், வியாபாரத்தில் வருமானம், லாபம் என்பதை அடிப்படையாக வைத்தே எதையும் செய்கிறோம். அது தவிர்க்க முடியாதது. அதுவே வளர்ச்சி என்று நினைக்கிறோம். அதனுடைய எல்லைகளைத் தொட நினைக்கிறோம். ஆனால் உண்மையில் லாப நோக்கில் இருந்து வெளியே வந்து பரிணாமத்தில் வளர வேண்டும், business evolution என்று சொல்லும் அளவிற்கு இருக்க வேண்டும் என்றால் லாபநோக்கத்தை தாண்டிய பார்வை வேண்டும். உயர் மனப்பான்மைகள் பல மடங்கு வளர்ந்த கம்பெனிகளை கவனித்தால் இது புரியும். அதே போல நம் கம்பெனியை நாம் நடத்துவதாக நினைக்கிறோம். உண்மையில் நம் கம்பெனியை நம் competitior தான் நடத்துகிறார் என்று கவனித்து பார்த்தால் புரியும். அவர் என்ன செய்கிறார், என்ன rate க்கு தருகிறார், எப்படி market செய்கிறார் என்று கவனித்து அதற்கு ஏற்ப நாம் செய்வது தெரியும். வரையில்லாத வருமானம், market க்கு நாம் ஆசைப்பட்டாலும் நம்மையறியாமல் வரையறையின் சட்டங்களை எடுத்துக் கொண்டு செயல்படுவது கவனித்து பார்த்தால் புரியும்.. அதாவது அகந்தை ஆன்மாவின் செயலை தான் எடுத்து செய்வதாக சொல்வது போல. prayer ஐ consecreation என்று நினைப்பது போல, வரையற்றதின் காலத்தை கடந்ததின் சட்டங்களை தவறாக புரிந்துக் கொண்டு அதன் முழுமை புரியாமல் செயல்படுகிறோம். நம் அபிப்ராயங்கள், பண்புகள், கொள்கைகள் , நம் emotions , நம் idea , நம் creativity தான் நம் market ஐ நிர்ணயிக்கிறது என்பது நமக்கு புரிவதில்லை. Market நம்மை நோக்கி வருவதை நாம் தான் தடுக்கிறோம் என்பது நமக்கு புரிவதில்லை. அது போல இத்தகைய செயல்களால் ஆன்மா

வெளிவருவதை நாம் தான் தடுக்கிறோம் என்பதை புரிந்துக் கொள்வதில்லை. மார்க்கெட்டின் முழுமையை நாம் புரிந்து கொள்வது போல பரிணாமத்தை, அதன் முழுமையை புரிந்துக் கொள்ளும் போது அங்கு இறை ஆன்மா இருக்கிறது என்பதை உணர முடியும்.

உதாரணமாக market expansion என்பது பரிணாமம், competition என்பது பரிணாமம். என்று நினைக்க ஆரம்பித்தால் அது நமக்கு உதவும். நம்மிடம் இருந்து ஒருவர் பிரிந்து போய், அல்லது நம்மிடம் வேலை செய்தவர் தொழில் ஆரம்பித்தால் பொறாமை படுகிறோம். கோபம் வரும். ஏமாற்றிவிட்டார்கள், துரோகம் செய்துவிட்டார்கள் என்று சொல்வோம். ஆனால் முழுமையை பார்க்க தவறிவிட்டோம் என்பதே அதன் பொருள். தொழிலில் நாம் பார்க்காத ஒரு area வை, பகுதியை, முறையை அவர் பார்த்து இருக்கிறார் என்பதே பொருள். நம் ஞானத்தை விட அவரின் ஞானம், அனுபவம், அதிகம் வெளிப்பட்டு இருக்கிறது என்பது பொருள். அது நம்மை முழுமைக்கு கொண்டு செல்லும். முரண்பாடு என்பதே நாம் பார்க்காத, பார்க்க பிடிக்காத இடத்தை பிறர் பார்ப்பதால் வருவதே. அல்லது நமக்கு பிடிக்காதது, பிறருக்கு பிடிப்பதால் வருவது. இரண்டுக்குமான இணக்க தீர்வை, முழுமையை தருவது இறை ஆன்மா. அங்கு சுமுகம் பிறந்து சித்தம் உயரும். ஆனந்தம் வரும். இப்படி பல விஷயங்களை, அறியாமை,மேல் மனம், காலம், பகுதி என்ற பார்வையில் பார்த்தால் இறையான்மா இருக்கும் இடமும், அது வெளிவரும் விதமும், அது தர இருக்கும் ஆனந்தமும் நமக்குப் புரியும்.

இந்த விஷயங்களை அறிவால் உணர முடியாது, ஆன்மாவால் தான் உணர முடியும் என்று பல இடங்களில் எழுதுகிறார். கர்மயோகி. ஆன்மாவே எங்கிருக்கிறது என்று தெரியாத போது அதை எப்படி உணர முடியும்? அறிவின் ஆழத்தில் சிந்தித்தால் உணர்வில் அதை கொண்டு வர முடியும், அதன் மூலம் அது உணர்வில் புரிந்து மனதில் ஞானமாக வெளிப்படும் என்கிறார். என்கிறார். உதாரணமாக அவரவர் அறிவுக்கு ஏற்ப நாம் நம்மை சுற்றி இருப்பவற்றை அல்லது நம் வாழ்வின் மேல் அவை ஏற்படுத்தும் தாக்கத்தை புரிந்துக் கொள்கிறோம்.

உதாரணமாக அரசியல் என்றால் என் வீட்டு பணியாளருக்கு இரட்டை இலை, சூரியன் இவ்விரண்டும் தான் தெரியும். அதை தாண்டி ஆட்சி, அரசியல் பற்றி எதுவும் தெரியாது. அதன் பல கட்டங்கள் சிலருக்குத் தெரியும். மாநில அரசு, மத்திய அரசு, முதல்வர், பிரதமர் போன்ற ஆட்சி முறைகள் பற்றித் தெரியும். ஆனால் உண்மையில் இவையனைத்தையும் செய்பவர் ஜனாதிபதி. அவரின் பெயரிலேயே எல்லாம் நடக்கிறது என்பது இந்திய அரசியல் அமைப்பு பற்றிய முழுமை புரிந்தவருக்கே தெரியும். அவரை பார்க்க வேண்டுமென்றால், அதற்கான தகுதி, அந்தஸ்து இருக்க வேண்டும். பிரதமரே ஆனாலும் அனுமதி பெற்றே பார்க்க

முடியும். ஆனால் அவர் PA எப்போதும் உடன் இருப்பார். உண்மையில் ஜனாதிபதியின் வேலைகளை வெளிப்படுத்த அவர் PA வைத்தான் எதிர்பார்க்கிறார். மற்றவர்களுக்கு இருக்கும் வரையறை PA விற்கு கிடையாது. PA வை தெரிந்தவர்கள் ஜனாதிபதியை சற்று எளிதாக பார்த்துவிட முடியும். அதே போல பகுதிகள் அனைத்தையும் ஆள்வது இறைவனே. இறை ஆன்மா அவன் PA போன்றது. மற்ற பகுதிகளுக்கு இருக்கும் , அதாவது physical , vital , mental க்கு இருக்கும் வரையறைகள் அதற்கு கிடையாது. பகுத்தறியும் சித்தம், தொகுத்தறியும் சித்தம், சத்திய சித்தம் என்று அனைத்திற்கும் பாலமாக இருப்பது அது. இறைவனின் சித்தத்தை படைப்புகளுக்கு ஏற்றாற்போல வெளிப்படுத்த உதவும் கருவி அது என்று பொருத்தி பார்த்தால் அதன் உருவகம் நமக்கு பிடிபடும்.

அதே போல இறைவனே அனைத்தும் ஆனான் என்பதை புரிந்துக் கொள்ள நம்மை, நம் பிள்ளைகளை, குடும்பத்தை எடுத்துக் கொள்ளலாம். நம் பிள்ளைகள் நம்மால் படைப்பட்டவை, நம் உடலே அவை என்பது புரிந்தால், இறைவன் எப்படி படைப்புள் வந்தான் என்பது புரியும். நம் சுபாவம் தான் பிள்ளைகள் அனைவறிலும் உள்ளது என்பதை ஆழ்ந்து கவனித்துப் பார்த்தால் புரியும். அது இறைவன் சுபாவம் தான் நம் ஆன்மாவாக இருக்கிறது என்பதை புரிய வைக்கும். அந்த படைப்புக்கான real idea , individuality , தனித்தன்மை என்பது நம் அறிவு தான், நாம் காட்டிய, வளர்த்த, சொல்லிக் கொடுத்த அறிவு தான் பிள்ளைகளிடம் உள்ளது, அவர்கள் individuality , தனித்தன்மையாக நின்று தான்தோன்றித்தனமாக, நடப்பது, தனக்கு எல்லாம் தெரியும் பெற்றோருக்கு தெரியாது என்று நினைப்பது அவர்களின் அகந்தை என்ற அளவில் நமக்குப் புரிந்தால், இறைவன் நம்மில் எப்படி அகந்தையாக சிருஷ்டியில் இறங்கி இருக்கிறான் என்பது புரியும். அல்லது நாம் எப்படி அவரிடம் நடத்துக் கொண்டு இருக்கிறோம் என்பது புரியும்.

ஒரு இக்கட்டான நேரத்தில் நம் பிள்ளைகளை கவனிக்கும் போது உண்மையில் நம் பிள்ளைகள் நம் சுபாவம், நம் அறிவு, நம் ஜாடை, நம் உடலமைப்பு, நம் உணர்ச்சி, நம் நடத்தை என்று பலவற்றை கொண்டு இருப்பதை முழுமையாக அறிவோம். அதாவது நம் படைப்பு, நம் பகுதி தான் அல்லது நம் சிறிய வடிவங்கள் தான் நம் குழந்தைகள் என்று புரிந்தால், இறைவன் எப்படி நாமாக மாறியிருக்கிறான் என்பது புரியும். இவையெல்லாம் புரிவது அறிவு. அப்போது நாம் பிள்ளைகளை, அவர்கள் அழிவை நோக்கி போகும் போது, எது சரி, எது தவறு என்று தெரியாமல் போகும் போது, நாம் நல்ல வழி காட்டுகிறோம், ஆனால் அவர்களுக்கு இது புரியவில்லையே என்னும் போது. நம் இதயம் எங்கோ துடிக்குமே , அந்த உணர்வு, அந்த sensitiity ஐ என்னவென்று சொல்ல முடியும். என்னவென்று விளக்கமுடியும். அது போன்ற ஒரு நிலையில் இருப்பது இறை ஆன்மா. எப்போதும் இறைவனை நோக்கி, அல்லது நம்மை அவனை நோக்கி திருப்ப இருப்பது, பரிணாமத்தில்

உயர்த்த இருப்பது இறைவனுக்கும் படைப்புக்கும் பாலமாக இருப்பது, அது பற்றிய ஞானத்துடன், உணர்வுடன், விழிப்புடன், கவனத்துடன் எப்போதும் இருப்பது அது. இந்த நிலைகளை நம்மால் சிந்தித்து உணர முடிந்தால் நம் ஆன்மா நமக்குப் பிடிபடும். அதை அன்னையாக உருவகப்படுத்த முடியும். Belief , Faith , trust என்பதைத் தாண்டி certitude , ஐயம் இல்லாத நம்பிக்கை என்ற ஒரு நிலையை புரிந்துக் கொண்டு அடைய முடியும். உண்மையான சமர்ப்பணம், சரணாகதி அங்கு தான் ஆரம்பிக்கிறது. அது திருவுருமாற்றத்தில் இருந்து ஆரம்பிக்கிறது.

அது செயல், திறன், சக்தி என்று எப்படி படைப்பின் பகுதிகளில், parts of the being கொண்டு வருகிறது, அவற்றின் கருவிகள் எவை என்பது பற்றி அடுத்த அடுத்த அத்தியாயங்களில் பார்க்கலாம் என்று முடிக்கிறார். அந்த அத்தியாயங்கள் வரும்போது நாமும் அதை பற்றி பேசலாம்.

இறை ஆன்மா வை நடைமுறையில் புரிந்து அடிப்படையாக மூன்று விஷயங்களை குறிப்பிடுகிறார். Fundamental aspects to understand real idea behind Divine Soul.

1. Unity through unity of consciousness – Inner outer correspondence - ஒருமை, ஒற்றுமை போன்ற விஷயங்களை நாம் ஆராயும் போது , அதை காண முடியும்.

2. Our own unity as extended individual beings – Other man point of view - பிறர் நிலை பார்வை. பலருக்கான பலனை விரும்புவது, நல்லெண்ணம் போன்றவைகளில் இதை புரித்துக் கொள்ள முடியும்.

3. Evolution of us by being true individuals - ஒவ்வொரு கணத்துக்குமான ஒரு உயர் சித்தத்தை எடுத்துக் கொண்டு திருவுருமாறி, பரிணாமத்தில் முன்னேறுவது.

இந்த மூன்ற நிலைகளையும் சுருக்கமாக அனைத்து ஆன்மாவுடன் ஒன்றுவது, பிரிவினையை அகற்றி பார்த்து ஒரு தனி ஆன்மாவுடன் ஒன்றுவது, இறைவனின் ஆனந்தத்துடன் ஒன்றுவது என்று புரிந்துக் கொள்ளலாம்.

இந்த மூன்றும் இறை ஆன்மா இருப்பதை அது வெளிப்படும் இடங்களை நாம் புரிந்துக் கொள்ள உதவும் என்கிறார் கர்மயோகி .

இப்போது இறை ஆன்மா நம்மை தொடர்ந்து பார்த்துக் கொண்டு இருக்கிறது. பரிணாமத்தில் உயர, வளம் பெற, ஆனந்தம் பெற காத்துக் கொண்டு இருக்கிறது என்று கூறுகிறோம். அது உண்மை தானா? நடைமுறையில் சாத்தியமா என்ற

கேள்வி வருகிறது. சாத்தியம் தான், நாம் தான் அதற்கு தடையாக இருக்கிறோம் என்பதற்கு என் வாழ்வில் நடந்த உதாரணம் மூலமே விளக்குகிறேன்.

1 Min Madurai

1 Min Mechon Refund

5 Mins Singapore – Muthu – GST

If time permits, GST Nimala Sitharaman

அடுத்த கூடலில் அடுத்த அத்தியாயத்தை பற்றிய கருத்துக்ககளை என் பார்வையில் பகிர்ந்துக் கொள்கிறேன்.

============================================================